# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


படைகளின் ஆண்டவர் இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார்; அதில் சுவைமிக்க பண்டங்களும், பழரசப் பானமும், கொழுப்பான இறைச்சித் துண்டுகளும், வடிகட்டிப் பக்குவப்படுத்திய திராட்சை இரசமும் பரிமாறப்படும். மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை இந்த மலையில் அவர் அகற்றிவிடுவார்; பிற இனத்தார் அனைவரின் துன்பத் துகிலைத் தூக்கி எறிவார். (எசா 25:6-7)

# திருஅவையில் மலேசியா உட்பட 21 புதிய கர்தினால்கள் நியமனம்



**கோலாலம்பூர்:** கடந்த செப்டம்பர் 30, சனிக்கிழமை உரோம் உள்ளூர் நேரம் மாலை ஆறு மணிக்கு, வத்திக்கானின் புனித பேதுரு பேராலய வளாகத்தில் நடைபெற்ற திருவழிபாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால் நிலைக்கு தேர்வுப்பெற்ற 21 ஆயர்கள் மற்றும் பேராயர்களை கர்தினால்களுக்குரிய Ber-retto எனப்படும் சிவப்புநிற தொப்பி, Zucchetto எனப்படும் தலையை ஒட்டி தலையில் வைக்கப்படும் சிறுவட்டத்தொப்பி, மோதிரம் ஆகியவற்றை அணிவித்து கர்தினால் நிலைக்கு உயர்த்தினார்.

இந்த 21 பேர்களில் ஒருவராக நமது பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் டத்தோ ஸ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களும் ஒருவராவார் என்பது நாடறிந்த செய்தியாகும்.

## கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ்

கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் 11 நவம்பர் 1951-ல் தென் மாநிலமான ஜொகூரில், ஜொகூர் பாருவில் பிறந்தார். குருத்துவத்தில் ஆர்வம் கொண்ட இவர் 1967-ல், அதாவது தமது 16-வது வயதிலேயே சிங்கப்பூரில் அமைந்திருந்த புனித பிரான்சிஸ் சேவியர் இளங்குருத்துவக் கல்லூரியில் இணைந்தார்.

தொடர்ந்து, மூன்றாண்டுகள் கழித்து பினாங்கில் College General எனப்படும் பெரிய குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர், தமது 26வது வயதில், மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தில் 28 ஜூலை 1977-ல் அருள்பணியாளராக அருள்பொழிவு செய்யப்பட்டார். அடுத்து மலாக்கா, புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கில் 1977 முதல் 1981 வரையிலும். தொடர்ந்து சிறிது காலம் ஜொகூர் பாரு, அமல உற்பவி அன்னை பங்கிலும் பங்குத்தந்தையாகப் பணியேற்றிருந்தார்.



*கர்தினாலாக நியமனம் பெறும் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்*

இதற்கடுத்து, dogmatic theology எனும் துறையில் மேல் படிப்பை மேற்கொள்ள உரோமைக்குச் சென்று 1983-ல் நாடு திரும்பியதும், மறுபடியும் மலாக்கா புனித சவேரியார் பங்கின் பங்குத் தந்தையாக அமர்த்தப்பட்டார். அங்கிருந்து, பினாங்கு குருத்துவக் கல்லூரியில், dogmatic theology பேராசிரியராகவும் ஆன்மீக இயக்குநராகவும், அங்கு புலாவ் திக்கூசில் உள்ள புனித அமலோற்பவ அன்னை பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார்.

அடுத்து, மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தில் பேரருட்தந்தையாக (Msgr) 2003 முதல் 2012 வரை நியமனம் பெற்றார். பின்னர் அங்கிருந்து நியூயோர்க்கில் உள்ள Maryknoll School of Theology எனும் பல்கலைக்கழகத்தில் 1991-ல். 'நீதியும் அமைதியும்' எனும் துறையில் மேற்கல்வி பெற்று நாடு திரும்பினார்.

நிறைவாக, 7 ஜூலை 2012-ல் பினாங்கு மறைமாவட்டத்தின் ஐந்தாவது ஆயராக அன்றைய திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் அவர்களால் நியமனம் செய்யப்பட்டார். இவ்வாறு படிப்படியாக உயர்ந்த இவரை கடந்த 9 ஜூலை 2023– அன்று திருத்தந்தை பிரான்சிஸ் கர்தினால் நிலைக்குத் தேர்வுச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கர்தினால் செபஸ்தியன் அவர்கள் ஆசிய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் சமூகத் தொலைத்தொடர்பு அமைப்பின் தலைவராகவும் உள்ளார். அத்துடன் இவர் மலேசியா, புரூணை மற்றும் சிங்கப்பூர் வட்டார ஆயர் பேரவையின் முன்னாள் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 30 செப்டம்பர் அன்று நியமனம் செய்யப்பட்ட 21 கர்தினால்களில் 18 பேர் வாக்குரிமை பெற்றவர்கள் ஆவர். புதிதாக நியமனம் செய்யப்பட்ட 21 கர்தினால்கள் உட்பட மொத்தம் உள்ள 242 கர்தினால்களில் 137 பேர் வாக்குரிமை பெற்றவர்கள் 105 பேர் வாக்குரிமை இல்லாதவர்கள்.

*செய்தி தொகுப்பு: ஆர்.கே.*

# உலக ஆயர்கள் மாமன்றம் கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பம்

**வத்திக்கான்:** "ஒருங்கிணைந்த பயணம் என்பதே, திருஅவையின் வாழ்வுமுறை. இப்பயணம், தூய ஆவியாருக்குப் பணிந்து நடப்பதால் கிடைக்கும் கனியாகும். இப்பயணத்தில் அனைவருக்கும் ஒரு பங்கு உள்ளது" எனும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கூற்றுப்படி கடந்த அக்டோபர் 4 புதன்கிழமை உலக ஆயர்கள் மாமன்றமானது திருத்தந்தையின் தலைமையில் நடைபெற்றக் கூட்டுத்திருப்பலியுடன் ஆரம்பமானது.

16-வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புப் பணிகள், உலக அளவில் கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் 10ம் தேதியிலிருந்து 2023ம் ஆண்டு அக்டோபர் வரை நடைபெற்று வந்தது. இதில், 2022ம் ஆண்டு ஏப்ரல் வரை மறைமாவட்ட அளவிலும், 2022ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து, 2023ம் ஆண்டு மார்ச் வரை கண்டங்கள் அளவிலும் இத்தயாரிப்புப் பணிகள் நடைபெற்றன. உலகளாவியத் திருஅவையின் இறுதிக்கட்ட பணிகள், 2023ம் ஆண்டு அக்டோபர் 4 புதன்கிழமை துவங்கி அக்டோபர் 29 ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைய திட்டமிடப்பட்டுள்ளது, இது முதல் கட்டக் கூட்டத்தொடராகும்.



*முன் தயாரிப்பு செபவழிபாட்டில் திருத்தந்தை*

அடுத்த இரண்டாவது கூட்டத்தொடர் 2024ஆம் ஆண்டு அக்டோபரில் இடம் பெறும் என்று திருத்தந்தை அறிவித்தார்.

கடந்த அக்டோபர் 4, புதன்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட கர்தினால்கள் 21 பேரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து கூட்டுத்திருப்பலியினை நிறைவேற்றினர். அவர்களோடு கர்தினால்கள் அவை உறுப்பினர்கள் 320 பேர், உலக ஆயர் மாமன்றத்தின் உறுப்பினர்கள், அருள்பணியாளர்கள் மற்றும் பொது நிலையினர் பலரும் கலந்து கொண்டனர்.

அக்டோபர் 4 இயற்கையின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவையும் அவரது பெயரைத் தனது பெயராகக் கொண்டு சிறப்புடன் பணியாற்றும் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயர்கொண்ட திருநாளையும் திருஅவை சிறப்பித்து மகிழும் வேளையில் இந்த 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றமானது ஆரம்பமாவது மிகச் சிறப்பாகத் திகழ்கின்றது.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்*

# கிழக்கு மலேசியாவில் மறைக்கல்வி மாநாடு

**கோத்தா கினபாலு** : "இரண்டாவது சபா மறைக்கல்வி" என்ற தலைப்பில் இந்த மாநாடு (பெர்ஹிம்புனன் கேட்கெடிகல் சபா 2-பிகேஎஸ்2) சபாவின் தலைநகரமான கோத்தா கினபாலுவில் உள்ள திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் 15 முதல் 17 செப்டம்பர் 2023 திகதி வரை சிறப்பாக நடைபெற்றது.

இந்த மாநாட்டை கோத்தா கினபாலுவின் பேராயர், கெனிங்காவ் மற்றும் சண்டகன் மறைமாவட்டங்கள் இணைந்து, அவர்களின் அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்களுக்காக ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த மூன்று நாட்களில் நடைபெற்ற மாநாட்டில் சபா முழுவதிலும் இருந்து 809 மறைக்கல்வி ஆசிரியர்களும், கூச்சிங், சரவாக் பேராயத்திலிருந்து 8 பேரும், கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 4 பேரும் ஒன்றிணைந்தனர். இந்த 821 பங்கேற்பாளர்கள் பெற்றுக்கொள்ள கோத்தா கினபாலுவுக்குச் சென்ற இந்த பிரதிநிதிகளுக்கு, ஒரே இடத்தில் பல பங்கேற்பாளர்களோடு ஒன்று கூடி, நட்போடு கலந்துரையாடவும், மறைக்கல்வியின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் உத்வேகமாக இருந்தது. இதில் கலந்துகொண்ட அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் இது ஒரு மறக்க முடியாத அனுபவம் என்றால் மிகையாகாது.

சபா மாநிலத்தில் உள்ள நம்பிக்கையாளர்கள், கிறிஸ்துவின் பெயரால் இறைவேண்டல் செய்வது தவிர வேறெதுவும் இல்லை என்பதை உணர்ந்து, அவரில் முழு நம்பிக்கை கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து, கிறிஸ்துவில் மீட்பின் உண்மையான சாட்சியாளர்களாக இருப்பதைக் கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்.

மலேசிய ஆலயமாகிய நாம், நம்மையும், நமது வேறுபாடுகளையும், சவால்களையும் தாண்டி,




*கிழக்கு மலேசியா மறைக்கல்வி பேரவையில் கோலாலம்பூர் பிரதிநிதிகள்*

சந்தித்து தங்கள் பயணத்தைத் தொடங்கினர். "கேட்கிஸ்: பெர்ஜாலன் பெர்சாமா டலம் இமான், ஹராபன் டான் காசி" அல்லது "மறைக்கல்வி: நம்பிக்கை, எதிர்நோக்கு மற்றும் அன்பில் ஒன்றாக நடப்பது".

கோலாலம்பூர் பேராயத்தின் பிரதிநிதியான அருட்சகோதரி ரீட்டா சவரியண்ணன், (FDCC), அவர்களின் தலைமையின் கீழ், கோலாலம்பூர் உயர் மறைமாவட்ட மறைக்கல்வி அமைப்புடன் (Arch-KL) ஒத்துழைக்கும் மறைக்கல்வி ஆசிரியர்களும் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களும் இதில் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் முதன்முறையாக கலந்து அனுபவம் ஒன்றாகப் பயணம் செய்து, விண்ணகத்திற்குச் செல்லும் நமது பயணத்தில் ஒருவருக்கு ஒருவர் உதவுவதை உண்மையாகக் கற்றுக்கொள்ள முடியும் என்பது எங்கள் நம்பிக்கை. அனுபவங்களைத் தவிர, மறைமாவட்டங்களுக்கிடையில் எங்களின் வளங்களைப் பகிர்ந்து கொள்வதுடன், அனைத்துக் மறைக்கல்வியாளர்களுக்கும் இது போன்ற பல திட்டங்களை வழங்கினால் அது மிகவும் பயனுள்ளதாகவும் சிறந்ததாகவும் இருக்கும் என்று குழுவாக உணர்ந்தோம்!

*திருமதி செனிப்பர் கண்டசாமி*

# பத்து ஆராங்கில், புனித மிக்கேல் முதன்மை வான தூதர் திருவிழா

**ரவாங்:** பத்து ஆராங் புனித மிக்கேல் முதன்மை வானதூதர் திருவிழா கடந்த 30 செப்டம்பர் 2023 அன்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. சுற்றுவட்டார மக்கள் இந்த திருவிழாவில் கலந்து சிறப்பித்தனர்.

29 செப்டம்பர் 2023 அன்று இணைக்கும் திருஅவை 30 செப்டம்பர் 2023 அன்று



படைப்பாற்றல் கொண்ட திரு அவை 01 அக்டோபர் 2023 உள்ளடக்கிய திருஅவை என்ற மைய கருத்துக்களில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. வான தூதர்கள் போல் நாமும் இறை சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக வாழ அழைக்கப் பட்டுள்ளோம் என்பதை நினைவூட்டப் பட்டது. அருள்பணியாளர்கள் வின்சென்ட் தோமஸ், சேவியர் ஆன்ட்ரு, ஜார்ஜ்



ஹெரிக்சன், ஆன்ட்ரு மாணிக்கம் மற்றும் அருள் சகோதரர் அஸ்வின் அவர்கள் திருப்பலிகளை நிறைவேற்றினர். திருவிழா திருப்பலிக்கு பின் இறைநம்பிக்கையாளர்கள் அனைவரும் இரவு உணவு உண்டு மகிழ்வுடன் வீடு திரும்பினார். ஏறக்குறைய 600 மக்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*-சிசிலியா தோமஸ், பத்து ஆராங்*

# காலநிலை நெருக்கடிக்கு பதிலுரைக்க விடும் அழைப்பு Laudate Deum

2015ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் சுற்றுச்சூழல் அக்கறைக் குறித்து வெளியிடப்பட்ட Laudato si' சுற்றுமடலின் இரண்டாம் பகுதியாக Laudate Deum என்ற சுற்றுமடல் அக்டோபர் 4 புதன்கிழமையன்று வெளியிடப்பட்டது. நம் பொது இல்ல மாகிய இவ்வுலகின் மீது அக்கறைக் குறித்த அர்ப்பணம் நம் கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து பிறக்க வேண்டும் என்பவை, அசிசியின் புனித பிரான்சிஸ் அவர்களின் திருவிழாவான புதன்கிழமை யன்று திருத்தந்தையால் வெளியிடப்பட்ட சுற்றுமடலில் மீண்டும் வலியுறுத்தப் பட்டுள்ளன.

இது பற்றிய தொடர் விளக்கக் கட்டுரைகள் வெளிவரவுள்ளது, ‘கடவுளைப் புகழ்வோம்‘ என்ற பெயருடன் 6 பிரிவுகளைக் கொண்டு 73 பத்திகளைத் தன்னுள் அடக்கியுள்ளது.



# திருவிருந்துக்குத் தகுதி பெறுவோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 28-ஆம் ஞாயிறு. இன்றைய முதல் வாசகத்தில், தம்மால் அன்பு கொண்ட மக்களுக்கு இறைவன் அளிக்கும் மாபெரும் விருந்தை எடுத்துரைக்கிறார் எசாயா இறைவாக்கினர். இரண்டாம் வாசகத்திலே பவுல் தன்னுடைய வறுமை வாழ்வும் வளமை வாழ்வும் எவ்வாறு துணையாளரின் துணை கொண்டு பக்குவத்தோடு வலுவூட்டப்பட்டது என்ற தன்னிலையை நமக்கு தெளிவுப்படுத்துகிறார்.

விண்ணரசு என்றால் என்னவென்பதை இயேசு பல உவமைகள் வழியாக விளக்கியுள்ளார். இத்தகைய உவமைகளில் சிறப்பான ஒன்று இன்றைய "திருமண விருந்து உவமை" ஆகும். இயேசு கிறிஸ்து விண்ணரசை திருமண விருந்திற்கு ஒப்பிடுகின்றார்.

இந்த விருந்து உவமையை யூதர்களை மையமாக வைத்து இயேசு கூறுகின்றார். யூதர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். இஸ்ரயேல் மக்களிடையே விருந் தோம்பல் மிக உயர்வாக மதிக்கப்பட்டது. அதிலும் விதவிதமான உணவுகளைப் பரிமாறி அறுசுவை உணவு வழங்கி விருந்தினரை மகிழ்விப்பது சாலச் சிறந்ததாக எண்ணப் பட்டது.

அவ்வாறே, கடவுளின் ஆட்சியில் மக்கள் அனைவருக்கும் சுவையான விருந்து வழங்கப்படும் என்று இயேசு போதித்தார்.

ஆனாலும், கடவுளின் அழைப்பைச் சிலர் ஏற்காமல் இருப்பதும் உண்டு. முதலில் அழைக்கப்பட்டவர்கள் இஸ்ரயேலர். அவர்களில் பலர் இயேசுவை மெசியாவாக ஏற்கத் தயங்கினர். ஆனால் பிற இனத்தார் பலர் கடவுளின் அழைப்பை ஏற்று, இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர். இறைவன் தரும் விருந்தில் பங்குபெற ஆவல் கொண்டனர்.

விருந்து என்பது எல்லாருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி. நற்சய்தியில், திருமண விருந்திற்கு ஏற்பாடு ஆகிவிட்டது. பலமுறை அழைப்பும் கொடுக்கப்படுகிறது. அரசர் மாளிகையில் விருந்து; அழைப்பு பெற்றவர்களோ பெரும் பணக்காரர்கள், நில பண்ணையாளர்கள், வியாபாரிகள். இவர்களோ அழைப்பை உதாசீனப் படுத்துகின்றனர். புறக்கணித்து விடுகின்றனர்.

திருமண விருந்துக்கு முன்தயாரிப்பு அவசியம். நற்செய்தியில் திருமண ஆடை அணியாத ஒருவரை விரட்டியடிக்கின்றனர். நமக்கு ஆண்டவரின் விருந்து நற்கருணை கொண்டாட்டம். நம்மையும் முன்தயாரிப் புப் பற்றி சிந்திக்க அழைக்கிறது இன்றைய நற்செய்தி.

நிறைவாக, நமது நிலையை நாம் உணர வேண்டும். நமது சமூகத்தில் நாம் எப்போதும் ஒன்றித்திருக்க வேண்டும், ஒன்றாக பயணிக்க வேண்டும். அப்போதுதான் நாம் சமூகத்தில் வேண்டிய, ஒருவராக எண்ணப்படுவோம். இல்லையேல் ஓரங்கட்டப்படுவோம். இது இயல்பு. நற்செய்தியில், அந்த மனிதன் திருமண விருந்திற்கான ஆடையை, நிச்சயம் வெளியே பெற்றிருக்கலாம். அதனையும் அவன் புறக்கணித்தான். இறுதியில் அவனும் புறக்கணிக்கப்படுகிறான். அவனிடமிருந்து நாம் கற்றுக்கொண்டு, நமது வாழ்வை மாற்றிக்கொள்வோம்.

மேலும், நற்கருணையில் தம்மையே விருந்தாகத் தரும் ஆண்டவரின் குரல் கேட்டு, நம்மையே விருந்தாகப் பிறருக்கு அளிக்க முன்வரவேண்டும். பங்கில், அ.தி.சாவில் நமது பணி, உடன் உழைப்பு நாம் பிறருக்கு அளிக்கும் விருந்தாக மாறவேண்டும். மக்கள் நமது தியாகப் பணியைச் சுவைக்க வேண்டும்.

*ஆ.வி.டேவிட். குளுவாங்*

**ஆண்டின் பொதுக்காலம் 28ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசா 25: 6-10a |
| தி.பா | 23: 1-3a. 3b-4. 5. 6 |
| 2-ம் வாசகம் | பிலி. 4: 12-14, 19-20 |
| நற்செய்தி | மத். 22: 1-14 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 3**